**தலைப்பு 197 - திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 197 - திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அமைச்சின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடுதல், அமுல்ப்படுத்துதல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 11,100.10 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அதில் ரூபா 7,939.03 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 3,161.07 மில்லியன் அதாவது 28.48 சதவீதமான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 3,678.25 | 3,412.71 | 265.54 | 7.22 |
| மூலதனம் | 7,421.85 | 4,526.32 | 2,895.53 | 39.01 |
| **மொத்தம்** | **11,100.10** | **7,939.03** | **3,161.07** | **28.48** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சிற்குரிய 19701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 25.00 | 18.14 | 9.00 | 9.79 | 90.00 | 45.08 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

அமைச்சின் கீழுள்ள 02 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 27.76 மில்லியன் ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0013/0126/000 | 0.12 |
| 6000/0000/00/0016/0116/000 | 27.65 |
| **மொத்தம்** | **27.76** |

**2.4 கணக்காய்வு அவதானிப்பு**

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டுத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 76.44 மில்லியன் கூட்டுத்தொகையான மொத்த தேறிய நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சிற்குரிய நோக்கங்களை அடைவதற்காக 10 செலவின விடயங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 329.52 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடுகளில் அந்நோக்கங்கள் எதிர்பார்க்கப்பட்டவாறு அடையப்படாததன் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 70 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான வீச்சளவில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன.

(இ) நிதிப்பிரமாணம் 94(1) இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளிற்கு முரணாக 14 செலவின விடயங்களிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை பயன்படுத்தியதன் பின்னர் ரூபா 3.61 மில்லியன் சேமிப்பை விஞ்சி பொறுப்புக்களிற்கு கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

### 3.2 பொது வைப்புக் கணக்கு

2 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 25.53 மில்லியன் கூட்டுத்தொகையான 43 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

19701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 415,750 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகள் 05 வருட காலப்பகுதியிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

### 3.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சின் கீழே 11 நிறுவனங்கள் செயற்பாட்டில் இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்காக பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், உள்ளகக் கணக்காய்வாளர் தவிர கணக்காய்வு பணிகளை நிறைவேற்றுவதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் இணைக்கப்பட்டிருந்தனர். இதன் காரணமாக அந்நிறுவனங்களில் தொடர்ச்சியாக விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியாதிருந்தது. மீளாய்வாண்டின் போது 05 விசேட புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு அறிக்கையொன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட கணக்காய்வு நடவடிக்கைகள் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட முடியாதிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

2015 ஆம் அண்டின் போது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்த ரூபா 41.93 மில்லியன் பெறுமதியான 07 வாகனங்களின் பதிவுகள் தற்போதும் அமைச்சின் பெயரில் காணப்பட்டதுடன் முறையாக அவ் மோட்டார் வாகனங்களை உரிமைமாற்றம் செய்வதற்கு அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்பட்டிருக்காத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சில் காணப்பட்ட 38 வாகனங்களில் அமைச்சிற்கு சொந்தமற்ற 04 வாகனங்கள் அமைச்சிற்கு முறையாக கையேற்கப்படாமல் 1999 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சின் நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன.

(ii) 2010 மே 14 ஆம் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க சனாதிபதி செயலகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் கௌரவ அமைச்சரின் அல்லது பிரதி அமைச்சரின் அலுவலகங்களிற்கு சேவையில் இணைக்கப்படக்கூடிய பதவியணியினரை விஞ்சி அமைச்சின் கீழுள்ள 03 நிறுவனங்களிற்கு சொந்தமான 08 உத்தியோகத்தர்கள் அமைச்சரவை அலுவலகம் மற்றும் அரச அமைச்சரவை அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அந்நிறுவனங்களில் அவ் உத்தியோகத்தர்களிற்கு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 2.71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

**3.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| **(அ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | |
| 2009 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய 10/2007(1) ஆம் இலக்க சுற்றிக்கையால் திருத்தப்பட்ட 2007 மே 09 ஆம் திகதிய 10/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | அமைச்சின் கௌரவ அமைச்சரிற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக உத்தியோகபூர்வ விடுதிகளின் தண்ணீர் மற்றும் மின்சார விலைப்பட்டியல்களிற்காக மாத்திரம் அச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லையை விஞ்சி ரூபா 1,308,937 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. |

**(ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2013 ஒக்தோபர் 24 ஆம் திகதிய 2013/2014(ii) ஆம் இலக்க ரீஏ சுற்றறிக்கை | 2016 ஆம் ஆண்டின் அமைச்சின் 11 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றியிருந்த போதிலும் அவ் உத்தியோகத்தர்களினால் வெளிநாட்டுப் பயிற்சிகளிற்குரிய அறிக்கைகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அமைச்சின் செயலாளரிற்கு சமர்ப்பிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**(இ) ஓய்வூதியத் திணைக்களத்தின் சுற்றறிக்கை**

| | |
|---|---|
| 2015 யூலை 23 ஆம் திகதிய 7/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தி | அமைச்சு மற்றும் அரச அமைச்சு அலுவலகங்களில் சேவையில் இணைக்கப்பட்ட பதவியணியினருக்குரிய அரசாங்க சேவை சேமலாப நிதியத்திற்கான அரசாங்கத்தின் பங்களிப்புக்கள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியளவில் தாமதிக்கப்பட்டு உரிய நிறுவனங்களிற்கு அனுப்பப்பட்டிருந்தது. |

## 3.7 செயலாற்றல்

தரமான தொழில்சார் பயிற்சியை வழங்குவதனூடாக உலகிற்குத் தேவையான மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் எதிர்பார்ப்பில் அமைச்சின் கீழுள்ள 07 நிறுவனங்களிற்கு இணைக்கப்பட்டு தீவு முழுவதும் 397 நிலையங்கள் செயற்பாட்டில் காணப்படுகின்றன. அந்நிறுவனங்களின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருடாந்தம் பாடசாலை முறைமை ஊடாக பல்கலைக்கழக நுழைவினை இழந்த இளைஞர் சமூகத்திற்கு தொழில்சார் பயிற்சி வாய்ப்புக்களிற்கான வசதிகள் வழங்கப்படாமை**

2015 ஆம் ஆண்டின் இறுதி வரை கல்விப் பொதுத் தராதர (சா/தர) மற்றும் கல்விப் பொது தராதர (உ/தர) பரீட்சைகளில் சித்தியெய்தாத மற்றும் உயர் கல்வி வாய்ப்புக்களை இழந்த 210,695 மாணவர்கள் காணப்பட்டனர். 2016 ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக கல்லூரிகள் உள்ளடங்கலாக 08 நிறுவனங்களால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 97,925 மாணவர்கள் தொழில்சார் பயிற்சிகளிற்காக சேர்க்கப்பட்டிருந்தனர். இதன் பிரகாரம் உயர் கல்விக்கான வாய்ப்புக்களை இழந்த மாணவர்கள் தொடர்பாக தொழில்சார் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதனால் உயர் தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில்நுட்பவியல் கல்லூரிகள் மற்றும் தொழில்சார் பயிற்சி நிலையங்களால் நடாத்தப்படுகின்ற கற்கைநெறிகளிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையை போதியளவு அதிகரிப்பதற்கு அமைச்சு கவனம் செலுத்தியிருக்க வேண்டிய போதிலும் அதற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை**

---

1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் தேசிய தொழில்சார் தகைமைகளுடன் (என்வீகியூ) கற்கைநெறிகளை நடாத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தராதரப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 2,148 கற்கைநெறிகளில் 526 கற்கைநெறிகள் தொடர்பாக அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஆய்வுகூட வசதிகள் போதாமை மற்றும் ஆய்வுகூடங்களை பயன்படுத்தக்கூடிய வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படாமை பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் தரம் குறைவதற்கு தாக்கமளித்திருந்தன. அதன் பிரகாரம் முறையான நியமமொன்றுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தரமான கற்கைநெறிகள் ஊடாக உலகளவில் பலப்படுத்தப்பட்ட பணியாற்றக்கூடிய வேலைப்படையொன்றை உருவாக்கும் அமைச்சின் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

**(இ) பயிற்சி கற்கைநெறிகளிற்காக மாணவர்கள் பங்குபற்றும் அளவு குறைவடைதல்**

---

இது தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) பயிற்சி கற்கைநெறிகளில் பங்குபற்றும் மாணவர்களின் அளவு முன்னேற்றமைந்திருக்காததுடன் மீளாய்வாண்டின் போது கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அமைச்சிற்குச் சொந்தமான பல்கலைக்கழகக் கல்லூரிகள் உள்ளடங்கலாக 09 நிறுவனங்களில் 70 சதவீதத்தை விடக் குறைந்தளவிலான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட கற்கைநெறிகளின் எண்ணிக்கை 306 ஆக இருந்தது.

(ii) அவ்வாறே அமைச்சின் கீழுள்ள 05 நிறுவனங்களின் தொழில்சார் பயிற்சிகளிற்குத் தோவையான வசதிகள் மற்றும் தேசிய தொழில்சார் தகைமை மட்டங்களுடனான 375 கற்கைநெறிகளிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் பங்குபற்றல் என்பன ஆகக்குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. அதற்கிணங்க, 5 மற்றும் 10 மாணவர்களிற்கிடையோன எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட 204 கற்கைநெறிகளும் 5 மாணவர்களை விடக் குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட 40 கற்கைநெறிகளும் காணப்பட்டதுடன் 131 கற்கைநெறிகளிற்காக மீளாய்வாண்டில் எந்தவொரு மாணவர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இளைஞர் சமூகத்தை கவர்ந்துகொள்வதை முன்னேற்றுவதற்காக முறைமைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்காமையானது மீளாய்வாண்டில் பயிற்சி நிறுவனங்களிற்குச் சொந்தமான வளங்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தத் தவறியமைக்கான பிரதான காரணமாக இருந்தது. ஒவ்வொரு நிறுவனத்தினதும் கற்கைநெறிகள் தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக பாடசாலை மாணவர்கள் மற்றும் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களை தொடர்ச்சியாக விழிப்புணர்வூட்டுவதன் மூலம் கற்கைநெறிகளிற்காக மாணவர்களை நெறிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இது தொடர்பாக அமைச்சின் பங்களிப்பு மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமையால் கற்கைநெறிகளில் எதிர்பார்க்கப்பட்ட அளவில் பயனை பெறமுடியாதிருந்தது.

**(ஈ) பிராந்தியங்களை முன்னிலைப்படுத்தி பயிற்சி நிலையங்களை அமைத்தல்**

அமைச்சின் கீழுள்ள வெவ்வேறு நிறுவனங்களில் ஒரே கற்கைநெறிகள் நடாத்தப்பட்ட பயிற்சி நிலையங்கள் பிராந்திய நிலையங்களில் அமைக்கப்பட்டிருந்த போதிலும் மாணவர்களை கற்கைநெறிகளிற்குத் தெரிவுசெய்வதில் பிரச்சனைகள் எழுவதற்கான சாத்தியத்தன்மை காணப்பட்டதுடன் கற்கைநெறிகளிற்கான மாணவர் எண்ணிக்கை குறைவடைவதற்கான பிரதான காரணமாக இது இருந்தது. மேலும் பொருளாதார மற்றும் சமூக பிரச்சனையுடைய மாணவர்களிற்கு வாய்ப்பளிப்பதற்காக பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கான தேவைப்பாடு தொடர்பில் அமைச்சு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(உ) 2016 இன் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகளை அமுல்ப்படுத்துதல்**

2016 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்ட முன்மொழிவின் கீழ் தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 800 மில்லியன் நிதியேற்பாடுகளில் ரூபா 371.6 மில்லியன் தொகை மாத்திரம் அவற்றிற்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அவற்றின் நிதிசார் செயன்முன்னேற்றம் 53 சதவீதமாக இருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) கடல்சார் பல்கலைக்கழகத்தில் புதிய பட்டக் கற்கைநெறிகளை ஆரம்பித்தல்**

கடல்சார் உயிரியல் (Marine Biology), கடல் பொழுதுபோக்கு மற்றும் கடல் துறைமுகம் (Marine Recreation and Sea Port), படகு/ கப்பல் கட்டிடம் (Boat/ Ship Building) மற்றும் ஒன்றிணைந்த கரையோர வளங்கள் முகாமைத்துவம் (Integrated Coastal Resource Management) போன்ற துறைகளில் கடல்சார் பல்கலைக்கழகத்தில் புதிய பட்டக் கற்கைநெறிகளை ஆரம்பிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தினால் முன்மொழியப்பட்டிருந்ததுடன் அவற்றிற்காக ரூபா 300 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் ஐந்து மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருந்த போதிலும் ரூபா 6.49 மில்லியன் கூட்டுமொத்தத் தொகை மாத்திரம் அவற்றிற்கான ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் மண் பரிசோதனைகளுக்காக செலவிடப்பட்டிருந்தன.

**(ii) இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தின் மாணவர்களின் எண்ணிக்கையை 200 ஆல் அதிகரித்தல்**

மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கில் மீளாய்வாண்டில் ரூபா 500 மில்லியன் நிதியேற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூடங்களின் இடவசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 29 மில்லியனில் ரூபா 20.61 மில்லியன் தொகை மாத்திரம் அவற்றிற்காக செலவிடப்பட்டிருந்தன. விடுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 108 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அந்நோக்கத்தை நிறைவேற்றத் தவறியதன் காரணமாக நிதியேற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

**(ஊ) யொவுன் திரிய நிகழ்ச்சித்திட்டம்**

தொழில்சார் பயிற்சி நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மீளாய்வாண்டில் அமைச்சால் அமுல்ப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட யொவுன் திரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 30 மில்லியன் நிதியேற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில்

மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(i) உலக இளைஞர் திறன்கள் தினம்**

உலக இளைஞர் திறன்கள் தினத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 10 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அந்நிதியேற்பாடுகளிலிருந்து அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் இனங்காணப்பட்டு அதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க 2016 இன் உலக இளைஞர் திறன்கள் தினத்திற்காக நினைவு விழாவை ஒழுங்குசெய்தமை தவிர வேறு நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் அதற்காக ரூபா 244,734 தொகையும் செய்தித்தாள் விளம்பரத்திற்காக ரூபா 903,527 தொகையும் மாத்திரம் யொவுன் திரிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டிருந்தன.

**(ii) பொது தனியார் பங்குடமை (Public Private Partnership)**

இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள தொழில்சார் பயிற்சி நிறுவனங்களின் மின்சார தொழில்நுட்பம் தொடர்பான கோட்பாடு சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்ளும் இலங்கை மின்சார சபையின் பயிலுநர் பயிற்சிக்காக பயிலுநர்களை நெறிப்படுத்தும் நோக்கில் 2012 ஆகஸ்ட் 23 இல் இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சானது மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி அமைச்சு மற்றும் இலங்கை மின்சார சபை என்பவற்றுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திட்டிருந்தது.

தீவு முழுவதும் அமைந்துள்ள 30 தொழில்நுட்பக் கல்லூரிகளில் வருடாந்தம் தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 இல் 2 வருட மின்னியலாளர் கற்கைநெறிகள் நடாத்தப்படுவதுடன் 19 தொழில்நுட்பக் கல்லூரிகளால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை மேற்குறிப்பிடப்பட்ட கற்கைநெறியை 448 மாணவர்கள் பூர்த்திசெய்திருந்தனர். எவ்வாறாயினும், பயிலுநர் பயிற்சிக்காக மின்சார சபைக்கு அம் மாணவர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மின்சார சபையால் அனுப்பப்பட்ட பதிவேட்டின் பிரகாரம் 512 மாணவர்கள் 2012 செப்தெம்பரிலிருந்து 18 தொழில்நுட்பக் கல்லூரிகளிற்கு இணைக்கப்பட்டிருந்ததுடன் அம் மாணவர்களிற்காக தனியான ஒரு வருட விசேட மின்னியலாளர் கற்கைநெறி நடாத்தப்பட்டிருந்தது. அமைச்சால் அவர்களின் கல்வி நடவடிக்கைகளிற்காக ரூபா 8,168,195 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும், தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 4 இல் ஒரு வருடக் கற்கைநெறி காலத்தைக் கொண்டிருந்த இந்த விசேட மின்னியலாளர் கற்கைநெறி பொது மின்னியலாளர் கற்கைநெறியின் பாடவிதானங்களை உள்ளடக்கியிருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஒரே பாடவிதானங்களை கற்பிப்பதற்காக இரண்டு கற்கைநெறிகளை நடாத்துவதற்கு பங்களித்த விடயங்கள் கணக்காய்விற்கு விளக்கமளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(iii) பயிற்சியளித்தல் மற்றும் கண்காட்சிகளை நடாத்துதல்**

மீளாய்வாண்டின் போது பயிற்சியளித்தல் மற்றும் கண்காட்சிகளை நடாத்துவதற்காக யொவுன் திரிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 15 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 175 உத்தியோகத்தர்களிற்களிற்கான தொழில்சார் வழிகாட்டல் தொடர்பான 07

ஐந்து நாள் வதிவிட செயலமர்வுகளும் 75 உதவி அபிவிருத்தி உத்தியோகத்தர்களிற்கான இரண்டு நாள் செயலமர்வொன்றும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 3.39 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதை பாதீட்டு நிதியேற்பாடகளுடன் ஒப்பிடும் போது நிதிசார் செயன்முன்னேற்றம் 22.6 சதவீதமாக இருந்தது. மேலும், மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்ட "Touch Your Future" பெயரினாலான கண்காட்சி மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iv) யொவுன் திரிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகளை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்காக முறையான நடைமுறையொன்று அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என முன்னைய சில வருடங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மற்றும் பயன்படுத்தல் என்பவற்றை பகுப்பாய்வு செய்த போது வெளிப்படுத்தப்பட்டிருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **ஆண்டு** | **வருடாந்த பாதீட்டு நிதியேற்பாடுகள்** | **பயன்பாடு** | **நிதியேற்பாடுகளின் சதவீதமாக பயன்பாடு** |
|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | |
| 2013 | 100.00 | 17.74 | 17.7 |
| 2014 | 104.00 | 71.96 | 69.2 |
| 2015 | 80.00 | 14.96 | 18.7 |
| 2016 | 30.00 | 6.27 | 20.9 |

**(எ) பல்கலைக்கழகக் கல்லூரிகளின் செயலாற்றல்**

தொழில்நுட்ப பாடப் பிரிவில் கல்விகற்ற ஆனால் பல்கலைக்கழக நுழைவிற்கான வாய்ப்பை இழந்த மாணவர்களிற்கான திறன்கள் துறை ரீதியான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய தொழில்சார் தகைமை மட்டம் 5 மற்றும் 6 இல் கற்கைநெறிகளை நடாத்துவதன் மூலம் நடுத்தர மட்டத்தில் தொழில்நுட்பவியலாளர்களை உருவாக்கும் நோக்கில் இருபது பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஸ்தாபிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2016 ஆம் ஆண்டளவில் இரத்மலானை, குளியாப்பிட்டிய, யாழ்ப்பாணம், மாத்தறை, அனுராதபுரம் மற்றும் பட்டங்கலவில் 06 பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. மேலும், பின்வரும் விடயங்கள் காரணமாக அக் கல்லூரிகள் முறையாக செயற்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டிருந்தது.

(i) பல்கலைக்கழகக் கல்லூரிகளின் பணிப்பாளர்களால் சேவையை இராஜினாமா செய்தல் மற்றும் பதவி வறிதாக்கல் மற்றும் காலத்திற்குக் காலம் கல்லூரிகளிற்கிடையில் தற்காலிக இடம்மாற்றங்களை வழங்குதல் என்பன கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் மாணவர்கள், கல்விசார் மற்றும் கல்விசாரா பதவியணியினர் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல் என்பவற்றை பாதித்திருந்தது.

(ii) அரசாங்க நிர்வாக ஏற்பாடுகள், சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடன் இணங்கி கல்லூரிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்சார் தொழில்நுட்பப் பல்கலைக்கழக அல்லது அமைச்சு மட்டத்தில் முறையான வழிகாட்டல் மற்றும் மேற்பார்வை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினரின் தொழில் சார்ந்த மனப்பான்மை மற்றும் தொழில் நடைமுறைகளை பாதுகாப்பதற்காக ஒழுக்கவியல் கோட்பாடொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கல்லூரிகளில் நடாத்தப்பட்ட டிப்ளோமா கற்கைநெறிகள் மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்பட்டு தராதரப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் குளியாப்பிட்டிய பல்கலைக்கழகக் கல்லூரியில் நடாத்தப்பட்ட 8 கற்கைநெறிகள் தவிர ஏனைய பல்கலைக்கழக கல்லூரிகளில் நடாத்தப்பட்ட கற்கைநெறிகள் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) கல்லூரிகளின் நடவடிக்கைகள் உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(vi) பல்கலைக்கழகக் கல்லூரிகளில் 49 கற்கைநெறிகளிற்கான மொத்த மாணவர் இயலளவு 1,470 ஆக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் 1,380 மாணவர்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் அவர்களில் 245 மாணவர்கள் கற்கைநெறிகளிலிருந்து விலகியிருந்தனர்.

(vii) கல்விசார் பதவியணியினரிலுள்ள விரிவுரையாளர் மற்றும் செயன்முறையாளர் பதவிகளில் முறையே 51 மற்றும் 22 வெற்றிடங்களும் போதனாசிரியர் பதவியில் ஒரு வெற்றிடமும் காணப்பட்டன.

(viii) பயிற்சி உபகரணங்களை பயன்படுத்துவதற்காக ஆய்வுகூடம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படவில்லை.

### 3.8 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல்வாங்கல்கள்

பட்டங்கல பல்கலைக்கழகக் கல்லூரியை ஆரம்பிப்பதற்கு முன்னர் கல்விசாரா பதவியணியினருக்காக 2015 சனவரி மாதம் மற்றும் யூலை மாதங்களின் போது முறையே 4 உத்தியோகத்தர்கள் மற்றும் 14 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு சம்பளங்கள், படிகள் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களாக ரூபா 10,282,015 கூட்டுத்தொகையான செலவினங்கள் துறை ரீதியான திறன்கள் அபிவிருத்தி செயற்திட்டத்தின் நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.9 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைச்சிற்கு சொந்தமான திருத்தப்பட வேண்டிய நிலையிலும் பயன்படுத்தப்பட முடியாத நிலையிலும் காணப்பட்ட 03 மோட்டார் வாகனங்கள் தொடர்பில் 2015 மார்ச் 31 ஆம் திகதிய 2/2015 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்கு சொந்தமான மோட்டார் வாகனமொன்று திருத்துவதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாகனம் திருத்தப்பட்டு அமைச்சிற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு உள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 21 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 01 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 437 | 374 | 63 |
| (iv) | ஆரம்ப நிலை | 49 | 39 | 10 |
| | **மொத்தம்** | **516** | **435** | **81** |